**கவனிக்க.-** இவ் வர்த்தமானியின் பகுதி VI இல் கேகாலை நீதி நிருவாகப் பிரிவின் 2014/2015 ஆம் ஆண்டுகளுக்கான யூரிமார் பெயர்ப்பட்டியலொன்று இதே திகதியில் இதே வர்த்தமானி இலக்கத்தின் கீழ் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மும் மொழிகளிலும் பிரசுரிக்கப்படுகின்றது.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1906 - 2015 මාර්තු මස 13 වැනි සිකුරාදා - 2015.03.13

*1906 ஆம் இலக்கம் – 2015 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 13 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி II – சட்ட சம்பந்தமானது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| சட்டங்கள் | - |
| சட்டமூலங்கள் | - |
| மேன்முறையீட்டு நீதிமன்றச் சட்ட அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற குற்றவிசாரணை பற்றிய அறிவித்தல்கள் | - |
| மாவட்ட நீதிமன்ற, நீதிவான் நீதிமன்ற அறிவித்தல்கள் | - |
| கடனிறுக்க முடியாமைக்கான வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |
| பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள் | - |
| மரணசாதன வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| சட்டக் கல்விச் சபையின் அறிவித்தல்கள் | - |
| நொத்தாரிசுமார் பெயர் பட்டியல் | - |
| நானாவித அறிவித்தல்கள் | 82 |
| பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |


### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2015, ஏப்பிறல் மாதம் 02 ஆந் திகதி வியாழக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2015, மாச்சு மாதம் 20 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**டபிள்யு. ஏ. ஏ. ஜீ. பொன்சேக்கா,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் 22 ஆந் திகதி.

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

# நானாவித அறிவித்தல்கள்

## மேல் மாகாண மேல் நீதிமன்றத்தில் (கொழும்பில் நடைபெறுவது) அதன் நியாயாதிக்கத்தை பிரயோகிக்கையில் ஒடுக்குவதற்கான அறிவித்தல்

வழக்கிலக்கம்: HC(Civil)09/2015/(Co)
தன்மை : ஒடுக்குதல்

இல.78பீ, பொல்கஸ்ஓவிட்ட வீதி, மத்தேகொட, இலங்கை என்ற முகவரியில் பதிவு செய்த அலுவலகத்தைக் கொண்டுள்ள ஓரியன்ட் கார்மன்ட்ஸ் பிஎல்சீ (PV9346 PB/ PQ) விடயத்தில்

மற்றும்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் XII ஆம் பாகத்தின் கீழ் மற்றும் அதன் நியதிகளில் நீதிமன்றத்தினால் ஒடுக்குவதற்காக ஒரு விண்ணப்பத்தின் விடயத்தில்;

கலாநிதி. திருஞானசம்பந்தர் செந்தில்வேல், 28D,விசாகா வீதி, கொழும்பு 4.

மனுதாரர்

குடியியல் நியாயாதிக்கத்தைப் பிரயோகிப்பதில் ( கொழும்பில் நடைபெறுகின்ற) மேல்மாகாண மேல்நீதிமன்றத்தினால் மேலே பெயர் குறிப்பிடப்பட்ட கம்பனியை ஒடுக்குவதற்கு 2015 பெப்புருவரி மாதம் 20 ஆந் திகதி 28D, விசாகா வீதி, கொழும்பு 04 என்ற முகவரியைச் சேர்ந்த கலாநிதி திருஞானசம்பந்தர் செந்தில்வேல் அவர்களால் ஒரு மனு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என இத்தால் அறியத்தரப்படுகின்றது. அத்தோடு சொல்லப்பட்ட மனுவை 2015 யூன் மாதம் 04 ஆம் திகதி நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது என்பதோடு சொல்லப்பட்ட மனு மீது ஒரு கட்டளையை மேற்கொள்வதற்கு சொல்லப்பட்ட கம்பனியின் எவரேனும் கடன் தருநர் அல்லது பங்களிப்புச் செய்பவர் அதனை ஆதரிப்பதற்கு அல்லது எதிர்ப்பதற்கு விரும்பினால் அந்த நோக்கத்திற்காக எவரேனும் ஆள் அல்லது அவரது சட்டத்தரணியால் விசாரணையின் போது ஆஜராகலாம் என்பதோடு சொல்லப்பட்ட கம்பனியின் எவரேனும் கடன் தருநர் அல்லது பங்களிப்புச் செய்பவருக்கு சொல்லப்பட்ட மனுவின் பிரதியொன்று கையொப்பமிடப்பட்டு அதற்கான குறித்துரைக்கப்பட்ட கட்டணத்தைச் செலுத்துவதன் மூலம் வழங்கப்படும்.

கையொப்பம் :
F.J.& G.De சேரம் ,
சட்டத்தரணி,
இல. 216, டி சேரம் பிளேஸ், கொழும்பு 10.

**குறிப்பு**.- சொல்லப்பட்ட மனு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப் படுகின்ற போது ஆஜராகுவதற்கு விருப்பம் கொண்டுள்ள எவரேனும் ஆள் அத்தகைய விருப்பத்தைத் தெரிவிக்கின்ற அறிவித்தலை மேலே சொல்லப்பட்ட சட்டத்தரணியின் முகவரிக்கு சேர்ப்பிக்க அல்லது தபால் மூலம் அனுப்பி வைக்க வேண்டும். அத்தகைய அறிவித்தலானது பங்குபற்றுகின்ற ஆளின் பெயர் மற்றும் முகவரி என்பவற்றைக் கொண்டிருக்க வேண்டும். அல்லது ஒரு நிறுவனமாயின் நிறுவனத்தின் பெயர்,முகவரி குறிப்பிடப்பட்டு ஆளினால் நிறுவனத்தால் கையொப்பமிடப்பட்டு, அவரது அல்லது அவர்களது சட்டத்தரணியால் ( எவரேனும் இருந்தால் ) சேர்ப்பிக்கப்பட வேண்டும். அல்லது தபாலிலிடுவதானால், 2015, யூன் மாதம் 03 ஆம் திகதி மாலை 6.00 மணிக்கு முன்னர் மேலே சொல்லப்பட்ட முகவரிக்கு போதுமான நேரத்தில் கிடைக்கக்கூடியவாறு தபாலிலிடப்பட வேண்டும்.

மனுதாரரின் சட்டத்தரணி.

3-268